# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 19/நகராட்சி/2019**

**நாள் : 14/03/2019**

**திரு R. தண்டபாணி,**
**கடலூர் – 607 002** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**கடலூர் நகராட்சி,**
**கடலூர்.** – **எதிர் மனுதாரர்**

கடலூர் மாவட்டம், கடலூர் நகராட்சி, திருப்பாப்புலியூர், வள்ளியம்மை நகர், 25–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு R. தண்டபாணி அவர்களின் 08.02.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.03.209 அன்று பெறப்பட்டு 19/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக மனுதாரர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், கடலூர் நகராட்சி, திருப்பாப்புலியூர், வள்ளியம்மை நகர், 25–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு R. தண்டபாணி என்பவர் தனது வீட்டிற்கு குடிநீர் இணைப்புப் பெற 03.04.2017 அன்று வைப்புத் தொகை ரூ. 6,950/– கடலூர் நகராட்சியில் செலுத்தி இரசீது பெற்றதாகவும், ஆனால் அத்தொகை கடந்த 1½ ஆண்டுகளாக நகராட்சிக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை எனத் தெரிவித்து, கையாடல் செய்த அலுவலர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 11.03.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. குடிநீர் பயனுக்கான கட்டணத்தை இதுவரை தன்னிடம் வசூலிக்கவில்லை என்றும், கட்டணத்தைப் பெற நகராட்சி அலுவலர்கள் மறுக்கிறார்கள் என்று விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் தெரிவித்தார். ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் தான் செலுத்திய குடிநீர் வைப்புத் தொகை கட்டணம் என்ன ஆனது என்று தெரியவில்லை என்றும், கையாடல் செய்த நபர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

3. கடலூர் நகராட்சி ஆணையர் 04.03.2019 நாளிட்ட கடிதத்தில் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனுதாரரிடமிருந்து குடிநீர் குழாய் இணைப்பிற்குப் பெறப்பட்ட வைப்புத் தொகை ரூ. 4,000/– நகராட்சிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, 1750003 எண்ணிட்ட இரசீது வழங்கப்பட்டுள்ளது என்று நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணத்திற்கான கேட்பினை எழுப்பவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் குடிநீர் கட்டண இணைப்பிற்கான வைப்புத் தொகை ரூ. 4,000/– மற்றும் குடிநீர் பராமரிப்பு செலவினக் கட்டணம் ரூ. 2,950/– ஆக மொத்தம் 6,950/– 03.04.2017 அன்று நகராட்சி அலுவலக கருவூலப் பிரிவில் செலுத்தியுள்ளார். மேற்குறிப்பிட்ட தொகை பெற்றுக் கொண்டதற்கு 1750003 எண்ணிட்ட இணையதள இரசீது வழங்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் குடிநீர் இணைப்பு வேண்டி நகராட்சி ஆணையருக்கு முகவரியிட்டு எழுதிய கடிதத்திலும் மேற்குறிப்பிட்ட தொகை பெற்றுக்கொண்டதற்கு முத்திரையிட்டு சான்றளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தான் செலுத்திய தொகை நகராட்சி அலுவலர்களால் கையாடல் செய்யப்பட்டுள்ளது என்று மனுதாரர் கூறியதற்கு எவ்வித ஆதாரமும் சமர்ப்பிக்கவில்லை. முறையீட்டு மனுதாரர் பயன்படுத்தும் குடிநீருக்கான கட்டணம் கடந்த 1½ ஆண்டுகளாக வசூலிக்கப்படாமல் உள்ளது எனவும் தெரிய வருகிறது. எனவே, முறையீட்டு மனுதாரர் செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணத்தை உடன் வசூலித்து அது சம்பந்தமான அறிக்கையினை 30 தினங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவும் கடலூர் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது. இதுவரை வசூலிக்காமல் இருந்த அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து விவரம் தெரிவிக்கவும் ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 14–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

19/3/19

பெறுநர்

1. திரு R. தண்டபாணி,
எண்.25, வள்ளியம்மை நகர்,
திருப்பாபுலியூர்,
கடலூர் – 607 002

2. நகராட்சி ஆணையர்,
கடலூர் நகராட்சி,
கடலூர்

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி